JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 108/2020 Date:20.07.2026 P.W. 6 / LW

| | |
|---|---|
| பெயர் | திரு. வெங்கடாசலம் |
| தந்தை பெயர் க/பெ | திரு. கந்தன் |
| முகவரி | எருங்கம் பாக்கம், அன்னை தரிசா, போரூர், சென்னை. |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 20th day of July 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.
**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.த.சா.ஆ. 7 ஆகும். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.த.சா.ஆ. 8 மற்றும் அ.த.சா.ஆ. 9 ஆகும். கடந்த ஆறு வருடத்திற்கு முன்பு ரெட்டீல்ஸ் இருந்து காவனூர் அருகே வந்த போது போலிசாரும், பொது மக்களும் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு நபரை கைது செய்து இருந்தார்கள். அந்த நபர் ஆஜர் எதிரிதான். அப்போது போலிசார் விசாரணை செய்த போது அந்த நபர் பணத்தையும், சுத்தியல் மற்றும் கடப்பாரை ஆகியவற்றை வைத்திருந்தார். மேலும், ஏ.டி.எம். ஐ உடைத்து பணத்தை திருட முயற்சித்ததாகவும், மற்றொரு ஏ.டி.எம் இல் கேட்டை உடைந்து அதில் இருந்த பணத்தை எடுத்ததாக கூறி மேற்கண்ட பணத்தையும், மற்றும் அதனுடன் கூடிய சுத்தி , கடபாரை ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அதன் போலிசார் கைப்பற்றினார்கள். அதற்கு நானும், எனது மகனும் சாட்சியமாக இருந்து கையெழுத்திட்டோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவதாக போடப்பட்ட கையொப்பம் எங்கு வைத்து போடப்பட்டது என்றால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன்.

சம்பவமானது இரவு 11.00 மணியளவில் நடந்ததாகவும், அங்கு வைத்து தான் நான் கையொப்பம் செய்தேன் என்று சாட்சி மாற்றி பதில் கூறியுள்ளார். எதிரியிடமிருந்து கடப்பாரை மற்றும் மற்றோரு ஆயுதத்தையும் கைப்பற்றினார்கள். சம்பவ இடமானது நான் அங்கு செல்வதற்கு முன்பாகவே கூட்டமாக தான் இருந்தது. மேற்படி பொருட்களை நான் அங்கு செல்லும் போதே வெளியில் எடுத்து வைத்திருந்தார்கள். மேற்கண்ட திருட்டு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும் கூட்டத்தில் இருந்தவர்கள் சொன்னதன் பேரில் தான் நான் அச்சம்பத்தை அறிந்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடைய மகனின் கையொப்பம் தான். ஏ.டி.எம். எந்த இடத்தில் இருந்தது என்பது பற்றியும், அது எந்த வங்கியின் ஏ.டி.எம் என்பது பற்றியும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி நீங்கள் கூறிய படி எந்த சம்பவமும் நடைப்பெறவில்லை என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur